Tamil Murasu, Pg 3, 21 January 2019
Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction





கிளைவ் ஸ்திரீட்டில் உள்ள கடைவீடு ஒன்றின் சுவரில் லீ சோங் ஷுவான் வரைந்துள் 'A scent of lights' என்ற தலைப்பிலான சுவரோவியம். இந்தியர் வாழ்வில் ஒளிக்குக்கூட மணம் உண்டு என்பது இந்தச் சித்திரம் மூலம் லீ சொல்லும் தகவல்.

படங்கள்: திமத்தி டேவிட், லசால் கலைக்கல்லூரி

# பண்பாட்டைச் சொல்லித்தரும் கலை

முவாமினா

மல்லிகைப் பூவையும் மசாலாப் பொருட்களையும் இந்தியர்கள் ஏன் விரும்புகிறார்கள் என்ற லீ சோங் ஷுவானுக்கு இருந்த கேள்விகளுக்கு விடையாக அமைந்துள்ளது அவர் வரைந்துள்ள வண்ண சுவரோவியம்.

லிட்டில் இந்தியா ஆர்ட்வொர்க் எனும் ஓவியம், கலைநிகழ்ச்சிகள், கண்காட்சிகள் என பல அங்கங்களைக் கொண்ட கலைப் பயணத்துக்காக கிளைவ் ஸ்திரீட்டில் உள்ள கடைவீடு ஒன்றின் சுவரில் சுவரோவியம் வரையும் வாய்ப்பு லசால் கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவரான 24 வயது லீக்கு கிடைத்தது.

வண்ணமயமான இந்தியப் பண்பாட்டைப் பிரதிநிதிக்கும் வகையில் ஒரு சித்திரத்தைத் தீட்ட நினைத்த அவர், இந்தியரின் பண்பாடு, அவர்கள் அதிகம் பயன்படுத்தும் பொருட்கள், பழக்க வழக்கங்கள் பற்றி ஆராயத் தொடங்கினார்.

"இந்தியர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அது குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கை எனக்குள் எப்போதும் இருந்தது. அதனால் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்த முடிவு செய்தேன்," என்ற அவர் இதற்காக பல மணி நேரங்களை லிட்டில் இந்தியாவில் செலவிட்டார்.

அங்குள்ள கடைக்காரர்கள், வாடிக்கையாளர்கள் அங்கு வரும் சுற்றுப்பயணிகள் என பலரிடமும் பேசினார். மல்லிகைப் பூவிலிருந்து ஊதுபத்தி வரையிலும் அவற்றின் மூலம், பயன்பாடு என எல்லாவற்றையும் தேடி அறிந்தார்.

"இந்தியர்களின் காய்கறிகள், இந்தியர் அணியும் வளையல்கள் என எல்லாமே வேறானவை. அவற்றின் வடிவம், வண்ணங்கள் போன்றவற்றுடன் அவற்றின் பயன்பாடும் மாறுபடுகின்றன," என்பது அவருக்கு ஆச்சரியமான அறிதலைத் தந்தன.

மேலும், லிட்டில் இந்தியாவின் பாரம்பரியத்தையும் அந்தப் பகுதியின் மக்களையும் தெரிந்துகொள்ளவும் இந்த கலைப் பயணம் நல்ல வாய்ப்பாக அமைந்தது என்றார் திரு லீ.

இந்தியத் தன்மை என்பது அனைவரது உணர்வுகளிலும் வெளிப்படும் ஒன்று என்ற அவர், தமது உணர்வுகளின் பிரதிபலிப்பாக, "ஒளியின் மணம்" எனும் சுவரோவியத்தை வரைந்துள்ளார்.

ஆண்டுதோறும் நடைபெறும் 'லிட்டில் இந்தியா ஆர்ட்வொர்க்' நிகழ்வை ஒட்டி இந்த ஆண்டு மொத்தம் எட்டு புதிய சுவரோவியங்களை லிட்டில் இந்தியா வட்டாரத்தில் வரைந்துள்ளனர் லசால் கலைக்கல்லூரி மாணவர்கள்.

இதற்காக, கலைநிகழ்ச்சிகளும் கதை நேரங்களும் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த சிறப்பு கலைக்கொண்டாட்டம் பிப்ரவரி 2ஆம் தேதி வரை நீடிக்கும்.

வெள்ளி, சனிக்கிழமைகள் லிட்டில் இந்தியா வட்டாரத்தின் பல்வேறு இடங்களிலும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கதை நேரத்தில் இந்த ஆண்டு மசாலாப் பொருட்களை வைத்து, உணவகம் ஒன்றில் வாடிக்கையாளர்களுடன் இணைந்து கதை சொல்ல இருக்கிறார் கதை சொல்வதில் பிரபலமாக விளங்கும் காமினி ராமச்சந்திரன்.

சிங்கப்பூர் பயணத்துறைக் கழகம், லிட்டில் இந்தியா கடைக்காரர்கள் மரபுடைமைச் சங்கம் (லிஷா) ஆகியவற்றுடன் இணைந்து லசால் கலைக் கல்லூரி இந்த லிட்டில் இந்தியா ஆர்ட்வொர்க் எனும் கலைப் பயணத்தை ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து வருகிறது.

நிகழ்ச்சிகள் குறித்த மேல் விவரங்களை artwalklittleindia.sg என்ற இணையத்தளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

காயத்ரி உணவகம் எதிரேயுள்ள நடைபாதையில் திநு வர்கீஸின் கைவண்ணத்தில் மலர்ந்துள்ள முப்பரிமாண செந்தாமரைகள்.

சிங்கப்பூர் இந்தியர் நுண்கலைக் கழக சுவருக்கு அழகு சேர்த்துள்ளது சுசானா டானின் 'ஸ்டார்கேஸர்ஸ் விஷ்' எனும் சுவரோவியம்.

அப்பர் டிக்சன் சாலை முனையிலுள்ள சியாமளா புத்தகக் கடையின் சுவரில், புத்தக அலமாரியை சித்திரமாக்கியுள்ளார் ஓவியர் யூனிஸ் லிம். சித்திரப் புத்தகங்களுடன் சியாமளா கடையின் உரிமையாளர் திரு எம்.கோவிந்தசாமி.

## Art that teaches culture

Image caption (Top): *A Scent of Lights* is a wall mural by Lee Song Xuan ('SONG') along a shophouse at Clive Street. "In Indian culture, even light has fragrance," he said.

Image caption (Left): These three-dimensional red lotuses are by artist Tinu Verghis on a pedestrian walkway in front of Gayatri Restaurant. *Stargazer's Wish*, a mural by Susanna Tan, adds beauty to the walls of the Singapore Indian Fine Arts Society's headquarters.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction

SONG has always wondered why Indians loved the jasmine flower and spices, and his colourful mural has answered this question. The former student of LASALLE College of the Art had the opportunity to participate in ARTWALK Little India 2019 as a mural artist, and his designated canvas was the wall of a shop house on Clive Street.

His goal? To create a drawing depicting the richness and vibrancy of Indian culture, and so he started researching about their traditions and everyday life.

“I didn’t know anything about the Indian culture so I decided to use this opportunity to get to know them,” SONG shared.

He spent months exploring Little India, interacting with shopkeepers and their customers, and the tourists who visited the neighbourhood. In time, he discovered various insights, such as the reason behind the widespread use of jasmine flowers and incense sticks. He also marveled at the difference in meaning of several motifs and colours common to both the Chinese and Indian culture.

Filled with emotion, he translated his newfound understanding of the culture into his wall mural *A Scent of Lights.*

For 2019’s edition of the annual multi-disciplinary festival ARTWALK Little India, a total of five new wall murals were painted by alumni of LASALLE College of the Arts. A range of fringe activities, performances and exhibitions have also been planned for the duration of this cultural event, which began on Friday and will last till 2 February 2019.

A highlight not to be missed is a story-telling session by Kamini Ramachandran over dinner at CreatureS restaurant. Over several courses, she will relate the pivotal role eating, gathering and conversation has at the dinner table for migrant communities of the precinct.

ARTWALK Little India is annually co-organised by LASALLE College of the Arts and the Singapore Tourism Board, with the support of the Little India Shopkeepers’ & Heritage Association (LISHA). For more, visit artwalklittleindia.sg.

Image caption (bottom): For last year’s festival, artist Eunice Lim drew a bookcase on the wall of the Siyamala bookstore located at 82 Serangoon Road.